வருகிறோம். அரசாங்க நிலத்திலும் ஆராய்ச்சி நடைபெறுகிறது, தனியார் நிலையத்திலும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. மாறுதல் தேவையானால் செய்யப்படும்.

நகராட்சி உறுப்பினர் தொகுதிகளைப் பிரித்தமைத்தல்.

* 323 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர சபைகளில் உள்ள இரட்டை அங்கத்தினர் வார்டுகளைப் பிரித்தமைக்கும் உத்தேசம் ஏதும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) சட்டம் எண் 17/37-ன் படி 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் திருத்தப்பெற்று அதன்படி நகராட்சிகளில் உள்ள இரட்டை அங்கத்தினர் தொகுதிகள் முறை நீக்கப்பட்டு, ஒற்றை அங்கத்தினர் முறை அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. அடுத்த நகராட்சிகள் தேர்தலிலிருந்து இம்முறை பின்பற்றப்படும். இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* 324 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகராட்சியில் வார்டுகளை பிரித்தமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இரட்டை மெம்பர் தொகுதிகளை ஒற்றை மெம்பர் தொகுதிகளாக மாற்றுவதற்கு உரிய அடிப்படைக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஏற்கனவே இது சட்டமாக ஆக்கப்பட்டு இரட்டை மெம்பர் தொகுதிகளாக இருப்பதைத் தனித் தனியாகப் பிரிக்க வேண்டு